பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28 அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: டாக்டர். இரா.செல்வராஜ்., இ.ஆ.ப.,

ந.க.எண். 8225/2022/அ6 நாள்: 27.10.2022

பொருள் : கருணை அடிப்படையில் பணிநியமனம் – காஞ்சிபுரம் மண்டலம் – பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம் – முன்னாள் பதிவறை எழுத்தர் – சம்பத் (திரு) நா – 17.10.2016–ல் பணியிடைக் காலம் சென்றது – வாரிசுதாரரும் மகனுமாகிய லோகேஷ் (திரு) ச – கருணை அடிப்படையில் மாங்காடு பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிநியமனம் செய்யப்பட்டது – 29.08.2018 முற்பகல் வரித்தண்டலர் பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்தல் – ஆணையிடப்படுகிறது

பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அலுவலகம் (இ) காஞ்சிபுரம் 31 OCT 2022 காஞ்சிபுரம் மண்டலம்

பார்வை :
1. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.1230/2016/பேரூ.2 நாள் 27.08.2018
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021.
3. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரின் கடித ந.க.எண். 1777/2022/பேரூ.1 நாள்.01.06.2022

*******

ஆணை:–

காஞ்சிபுரம் மண்டலம், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவறை எழுத்தராகப் பணிபுரிந்து 17.10.2016–ல் பணியிடை காலமான திரு.நா.சம்பத் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.ச.லோகேஷ் என்பவருக்கு பார்வை 1–ல் காணும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு பேரூராட்சியில் வரித்தண்டலராகப் பணிநியமனம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தனியர் 29.08.2018 முற்பகல் முதல் வரித்தண்டலர் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்துள்ளார். அதன் தொடர்ச்சியாக தற்போது திருப்பெரும்புதூர் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வருகிறார்.

அதனை தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்ற திரு.ச.லோகேஷ் என்பவரது பணியினை வரன்முறை செய்ய கேட்டு பார்வை 3–ல் காணும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து பரிந்துரை செய்து கருத்துரு வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் இந்நேர்வில் பரிசீலிக்கப்பட்டதில் பார்வை 2–ல் காணும் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021–ல்

வெளியிடப்பட்ட வழிமுறைகளின்படி நியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற பேரூராட்சிகளின் ஆணையர் நிலையிலேயே இந்நேர்வில் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் விபரங்களின் அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் திரு.ச.லோகேஷ் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்காணும் விபரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் / பதவி /தற்போது பணிபுரியும் அலுவலகம் | கருணை அடிப்படையில் முதன் முதலில் பணி நியமனம் செய்யப்பட்ட பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | திரு.ச.லோகேஷ் வரித்தண்டலர் திருப்பெரும்புதூர் பேரூராட்சி | மாங்காடு பேரூராட்சி | 29.08.2018 மு.ப | 29.08.2018 மு.ப |

மேலும் இப்பொருள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளவும் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பதிவேட்டின் நகலினை இவ்வாணையரகத்திற்கு அனுப்பிடவும் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்.
பேரூராட்சிகளின் ஆணையர் (3/3)

<u>பெறுநர்</u>

திரு.ச.லோகேஷ்,
வரித்தண்டலர்,
திருப்பெரும்புதூர் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.
(காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக)

<u>நகல்</u>:-

1. மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம்
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம்
3. செயல் அலுவலர், திருப்பெரும்புதூர் பேரூராட்சி
4. அ6 இருப்புப் கோப்பு

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்
காஞ்சிபுரம் மண்டலம்

ந.க.எண்: 1777/22, பேரூ,
நாள்: 31.10.2022

அனுப்பப்படுகிறது

பெறுநர்
திரு.ச.லோகேஷ்
வரித்தண்டலர்
திருப்பெரும்புதூர் பேரூராட்சி
(செயல் அலுவலர் வழியாக)

பேரூராட்சிகள் உதவி இயக்குநர்
காஞ்சிபுரம் மண்டலம்.